**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 03/2009**

Prosecution witness : **56**

| | | | |
|---|---|---|---|
| Name: | பாலசுப்பிரமணியன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1, A8, A11, A12, A13, A14, A15, A17, A18, A19 present. A6 already died. Others absent. Petition U/s 317 crpc filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of

**03.05.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில் கிராமநிர்வாக அலுவலகராக பணி புரிந்து பணி ஓய்வு பெற்று வீராணம்கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். என்னுடன் பணிபுரிந்த கிராம உதவியாளர் சுப்பையா என்பவர் இறந்துபோனார். 14.08.2007 ம் தேதி தென்காசியில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது சேரன்மாதேவி காவல்துணைகண்காணிப்பாளர் என்னை அழைத்தன் பேரில் நானும் கிராமஉதவியாளர்-சுப்பையாவும் தென்காசி கூலக்கடைபஜாரில் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றோம். அப்போது மதியம் சுமார்12.30 மணியிருக்கும். அந்த இடத்தில் சுரேஷ், அசன்கனி, சேகர் ஆகிய மூவரின் பிரேதம் வெட்டுக்காயங்களுடன் கிடந்தது. அருகிலேயே 9757 என்ற வெள்ளை நிற கார் ஒன்றும் , 0558 நீலநிற யமாகாபைக் கிடந்தது. ஆறு அரிவாள்களும், மஞ்சள்பையும், சணல்பிரிந்த

உருளை கிழங்குபோன்ற வெடிகுண்டும், இரத்த கரைபடிந்த கத்தியும் அங்கு கிடந்தது. அந்த இடத்தை சேரன் மாதேவி காவல் துணை காண்காணிப்பாளர் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தார். பார்வை மகஜர் **அ.சா.ஆ.**15 ஆகும். அதில் நானும் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். பின்னர் 3.30 மணிக்கு அம்பாசிடர் காரையும், யமகா பைக்கையும் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அது **அ.சா.ஆ.**16 ஆகும் அந்த வாகனத்திற்கான புகைப்படங்கள் **அ.சா.ஆ.**17 **மற்றும்** 18 **ஆகும்.** பின்னர் மாலை 4.00 மணிக்கு சேகர் இறந்த இடத்தில் இரத்தம் படிந்த மண் பகுதியையும், இரத்தம் படாத பகுதியும் தோண்டி எடுத்து அத்தாட்சியில் கைப்படுத்தினார்கள். மஞ்சள் நிற பையையும் பிரித்து எடுத்த சணல் கொஞ்சமும் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் அது **அ.சா.ஆ.** 19 ஆகும். . **இரத்தம் பட்ட மண் சா.பொ.**3 **ஆகும். இரத்தம் படாத மண் சா.பொ.**4 **ஆகும். இரத்தம் படிந்த கத்தி சா.பொ.**5 **ஆகும். மஞ்சள் நிற பை சா.பொ.** 6 **ஆகும். பிரித்தெடுக்கப்பட்ட சணல் சிறிதளவு சா.பொ.**7 **ஆகும்.** மாலை 4.30 மணிக்கு சுரேஷ் என்பவர் உடல் கிடந்த இடத்தில் இருந்து இரத்தம் பட்ட தாரும், மண்ணும் கலந்த இரத்தம் பட்ட மண்ணையும் இரத்தம் படாத மண்ணையும், கறைபட்ட அரிவாளையும் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.** 20 ஆகும். இரத்தம் பட்ட தாரும் மண்ணும் கலந்த மாதிரி **சா.பொ.** 8 ஆகும். இரத்தம் படாத மாதிரி **சா.பொ.**9 ஆகும். இரத்த கறை படிந்த அரிவாள் **சா.பொ.** 10 ஆகும். பின்னர் மாலை 5.00 மணிக்கு ரமேஷ் பூக்கடை அருகில் இரத்த கறை படிந்த இரண்டு அரிவாளை அத்தாட்சியில் கைப்பற்றினோம். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.** 21 ஆகும். அந்த இடத்தில் கைப்பற்றிய இரத்த கரை படிந்த இரண்டு அரிவாள்கள் **சா.பொ.**11 **வரிசை** ( 2 **எண்ணம்**). மாலை 5.30

மணியளவில் பாலகிருஷ்ணன் எண்ணெய் கடை அருகில் இரத்த கறை படிந்த இரண்டு அரிவாளை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அதற்கான அத்தாட்சி **அ.சா.ஆ.**22 ஆகும். இரத்த கறை படிந்த அரிவாள்கள் இரண்டு **சா.பொ.**12 வரிசை (2 எண்ணம்). மாலை 6.00 மணியளவில் முத்து டீஸ்டால் அருகில் இரத்த கறை படிந்த ஒரு அரிவாளை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அதற்கான அத்தாட்சி **அ.சா.ஆ.** 23 ஆகும். இரத்த கறை படிந்த அரிவாள் **சா.பொ.** 13 ஆகும். மாலை 6.30 மணியளவில அசன்கனி இறந்த இடத்தில் இரத்தம் படிந்த மற்றும் இரத்தம் படாத மண் சிறிதும் ஒரு கத்தியும் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.** 24 ஆகும். இரத்தம் பட்ட மண் **சா.பொ.** 14 ஆகும். இரத்தம் படாத மண் **சா.பொ.**15 ஆகும். இரத்தம் பட்ட கத்தி **சா.பொ.** 16 ஆகும். மாலை 6.45 மணியளவில் TN 76 B9529 என்ற ஆட்டோவை கன்னிமாரம்மன் கோவில் அருகில் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.** 25 ஆகும். அந்த அத்தாட்சி அனைத்திலும் நானும் என்னுடன் உதவியாளர் சுப்பையா என்பவரும் கையொப்பம் செய்தோம். **(இந்நிலையில் சாட்சி வயதானதாலும் நீண்டநேரம் நின்று சாட்சியம் அளிக்க இயலாதகாரணத்தாலும் அவரது வேண்டுகோளின் பேரில் முதல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது)**